# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • மே 4, 2019 | Weekly E-paper • MAY 4, 2019




## பொள்ளாச்சி பெரம்பலூர் !

'பைந்தமிழ்' பாபு




## மக்கள் விரோத ஆனையம்



## சூறையாடும் சூரப்பா !

மா.உதயகுமார்



# யாகம் செய்தால் மழை வருமா?

- பொள்ளாச்சி மா.உமாபதி


கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • மார்ச் 30, 2019 Weekly E-paper • MAY 4, 2019

# யாகம் செய்தால் மழை வருமா?

• பொள்ளாச்சி மா.உமாபதி



மழை பெய்ய வேண்டிச் சிறப்பு யாகம் நடத்த அனைத்து இந்து அறநிலையத்துறை சார்ந்த கோவில்களுக்கும் அரசு முதன்மைச் செயலாளரும் அறநிலையத்துறை ஆணையாளருமான பணீந்திர ரெட்டி சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். அதன்படி பர்ஜன்ய சாந்தி வருண ஜெபம் , வேள்வி செய்து சிறப்பு அபிஷேகம் செய்தல், அருள்மிகு நந்தி பெருமானுக்கு நீர்த்தொட்டி கட்டி நந்தியின் கழுத்துவரை நீர் நிரப்பி வழிபாடு செய்தல், சுந்தரமூர்த்தி நாயனாரின் ஏழாம் திருமுறை ஓதுதல், திருஞானசம்பந்தரின் 12ஆம் திருமுறையை மேகரா குறிஞ்சி என்ற பண்ணில் பாடி வேண்டுதல், நாதசுரம், வயலின், புல்லாங்குழல், வீணை வாத்தியங்களுடன் அமிர்தவர்ஷினி, மேகவர்ஷினி, கேதாரி, ஆனந்தபைரவி, ரூபகல்யாணி போன்ற ராகங்களைக்கொண்டு வாசித்து வழிபாடு செய்தல் என்று பல்வேறு வழிமுறைகளை கடைபிடிக்க உத்தரவு இட்டு உள்ளது.மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் நல்ல காரியம் தானே, நடக்கட்டும் என்று தோன்றும்.

தனிமனிதர்கள், தனி அமைப்புகள் தாங்கள் விரும்பும் வழிகளில் செயல்பட அவர்களுக்கு உரிமை உண்டு என்றால் நாம் அதில் தலையிடப்போவது இல்லை.. ஆனால் ஒரு மதச்சார்பற்ற அரசு, இம்மாதிரியான மூடநம்பிக்கைகளை ஊக்குவிப்பது சரிதானா என்ற கேள்வி எழுகிறது. அத்துடன் யாகம் நடத்துவது எங்கள் உரிமை என்றும் சிலர் சொல்லக்கூடும் அது அவர்கள் உரிமையானால் அதனைக் கேள்விகேட்கும் உரிமை நமக்குண்டு. . *" The fundamental duty of a citizen is to develop the scientific temper, humanism and the spirit of inquiry and reform."* என்பது அரசியல் சட்டம் வழங்கியுள்ள உரிமை. "அறிவியல் பூர்வமான உணர்வுகளை வளர்ப்பதும், கேள்விகேட்கும் உணர்வுகளையும், சீர்திருத்தங்களையும் வளர்ப்பதும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் கடமையாகும் என்று இந்திய அரசியல் சட்டம் கூறுகிறது.

மேலும் இப்படிப்பட்ட ஆணைகளை இடுவதற்கு அந்த ஆணையருக்கு அதிகாரமே இல்லை. அவருக்கான அதிகாரமெல்லாம் கோவில்களின் கணக்கு வழக்குகள் சரியாக இருக்கிறதா, சொத்துகள் எல்லாம் முறையாகப் பராமரிக்கப் படுகிறதா, கோவில் சிலைகளும், நகைகளும் எல்லாம் பத்திரமாக இருக்கிறதா என்று கண்காணிக்கிற, கணக்கு வழக்குகளைப் பராமரிக்கிற வேலைதான் அவருடையதே தவிர, எந்த நேரத்தில் என்ன பூசை செய்யவேண்டும், - எப்படி செய்ய வேண்டும் - யாரைக் கொண்டு செய்யவேண்டும் என்று சொல்வது அல்ல. மூடநம்பிக்கைகளை ஒழிப்பதுதான் ஒரு நல்ல மக்கள் நல அரசின் கடமை. அதை விட்டுவிட்டு மூடநம்பிக்கைகளை வளர்ப்பது அல்ல. இதை இப்போது விட்டுவிட்டால், "அவன் அதைச்செய்தால் மழை வராது. இவன் இதைச் செய்தால் மழை வராது " என்று எவனோ எதிலோ சொன்னதையெல்லாம் நம்பி நடவடிக்கை எடுக்கிற அரசாக இது மாறிவிடும். " பதினெட்டுக் கன்னிப்பெண்கள் நிர்வாணமாக ஊரைச் சுற்றிவந்தால் மழை வரும்" என்று அந்த சாஸ்திரி சொன்னான், இந்த நம்பூதிரி சொன்னான் என்று நடைமுறைப் படுத்த மாட்டார்கள் என்று யார் உத்திரவாதம் அளிப்பது? முன்பொருசமயம் வயலின் கலைஞர் குன்னக்குடி வைததியநாதன் கோடை வெயிலில் வறண்டுபோன குளத்தில் இறங்கி மழையை வரவைக்க அமிர்த வர்ஷினி ராகங்களை இசைக்கிறேன் என்றார்.. அவர் கொண்டுபோன கூஜாத் தண்ணீரைக் குடித்துவிட்டுத் திரும்பினாரே தவிர மழையை வரவைக்க முடியவில்லை.

மழை எப்படிப் பெய்கிறது என்று மூன்றாம் வகுப்புக்கு குழந்தையைக் கேட்டாலும்,." ஏரி குளங்கள், நீர்நிலைகள், ஆறுகள் கடலில் உள்ள நீர் சூரிய வெப்பத்தால் ஆவியாகி மேலே சென்று கருமேகங்களாக உருவெடுத்து குளிர் காற்று பட்டதும் மழையாகப் பொழிகிறது" என்று சொல்லும். கருமேகங்கள் மீது குளிர் காற்று பட, மரங்களை வளர்க்கவேண்டும்., வனங்களைப் பாதுகாக்க வேண்டும். ஆனால் இந்த அரசு, வனங்களை அழித்து யானைகளின் வழித்தடங்களில் கார்ப்பரேட் கோவில்களை எழுப்பிய ஜக்கிகளுக்கான அரசாக அல்லவா இருக்கிறது. போதாக்குறைக்கு, வனங்களையும், பல்லாயிரம் மரங்களையும் அழித்து 8வழிச் சாலைகள் அமைத்து அதில் கல்லா கட்ட நினைக்கும் சுயநலப் பேய்களின் ஆட்சியல்லவா நடக்கிறது. அணைகளில் உள்ள நீர் ஆவியாகாமல் தடுக்க தெர்மாக்கூல் அட்டைகளைப் போட்டுத் தடுக்கும் அறிவியல் அறிஞர்களை அமைச்சர்களாகக் கொண்ட அரசல்லவா இது.

அண்ணாவின் பெயரால் கட்சியை வைத்துக்கொண்டு பகுத்தறிவுக்குக் கிஞ்சிற்றும் தொடர்பில்லாத ஆட்சி நடைபெற்றுக்கொண்டு உள்ளது. பல்லாண்டுகள் பல்வேறு சீர்திருத்தச் செம்மல்கள் போராடி, குழந்தைத் திருமணம்,, உடன்கட்டை ஏறுதல், பொட்டுக்கட்டுதல் போன்ற மூடநம்பிக்கைகளை ஒழித்தனர். அந்த மூடநம்பிக்கைகள் எல்லாம் மீண்டும் அரங்கேறி விடுமோ என்கிற அச்சம் மேலோங்குகிறது. நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டிய காலம் இது.,

எது எப்படியானாலும் அரசு ஆணையிட்டு விட்டது. அதை அனைத்துக் கோவில்களும் நிறைவேற்றிவிட்டன. அவர்கள் நம்பிக்கை உண்மையென்றால் இந்நேரம் தமிழகமே மழை வெள்ளத்தால் மூழ்கியிருக்க வேண்டாமா? நனைந்திருக்கவாவது வேண்டாமா? கடந்தவாரம் ஆங்காங்கே பெய்த மழை கூட இப்போது இல்லை. அப்படியானால் கோவில்களில் அரசு உத்தரவை மதித்து யாகம் நடக்கவில்லையா? அல்லது நடத்திய யாகங்களுக்கு மழையைக் கொண்டுவரும் சக்தியில்லையா? அல்லது சுந்தரமூர்த்தி நாயனாரின் ஏழாம் திருமறையும் , திருஞான சம்பந்தரின் 12ஆம் திருமுறையும் தமிழில் இருப்பதால் அந்த வாயு பகவானுக்கும் , வருண பகவானாவுக்கும் புரியவில்லையா? அவையெல்லாம் தேவ பாஷையில் சொன்னால்தான் புரியுமா? நீசபாஷையில் பாடியதால் தெரியவில்லையா?

●

# பொள்ளாச்சியின் எதிரொலி பெரம்பலூரில்

● 'பைந்தமிழ்' பாபு




"பெரம்பலூர் வழக்கினை மூடி மறைத்து அதிமுக எம்எல்ஏவைக் காப்பாற்றி விடலாம் என்று முதல்வர் எடப்பாடி பழனிசாமி கனவில் கூட நினைத்துவிடக் கூடாது" என்று திமுக தலைவரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான தளபதி மு.க. ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சமீபகாலமாகத் தமிழகத்தில் இளம் பெண்கள் மற்றும் கல்லூரி மாணவிகள் மீதான பாலியல் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருவது மிகவும் கவலைக்குரியதாகவும், அதற்கு ஆளும் கட்சியே உடந்தையாக இருப்பது வெட்கக்கேடாகவும் உள்ளது. பெண்ணுரிமையைப் பேணிக் காக்க வேண்டிய அரசும் அதற்குப் பொறுப்பேற்க வேண்டிய காவல்துறையும் குற்றவாளிகளைப் பாதுகாப்பதிலேயே முழுக்கவனம் செலுத்துவது வெட்கக்கேடான செயல்.

ஆளும் கட்சியான அதிமுகவின் முக்கியப் புள்ளிகள் தொடர்புடைய பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமையை மூடிமறைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள எடப்பாடி அரசிற்கு அடுத்த சிக்கலாக உருவெடுத்துள்ளது பெரம்பலூரில் நடைபெற்றுள்ள பாலியல் சம்பவம்.

பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த சில குடும்பப் பெண்களையும் கல்லூரி மாணவிகளையும் வேலை வாய்ப்பு வாங்கித் தருவதாக ஆசை வார்த்தைகள் கூறி, அ.தி.மு.க. எம்எல்ஏ , எம்எல்ஏ வின் கூட்டாளியான போலி பத்திரிகையாளர் மற்றும் சிலர் சேர்ந்து கூட்டுப் பாலியல் தொந்தரவு செய்ததாகப் பாதிக்கப்பட்ட இளம்பெண் ஒருவர் வழக்கறிஞர் அருள் என்பவருடன் பேசிய ஆடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவி வருகிறது.

அந்த ஆடியோ உரையாடலின் ஒரு பகுதியில்

"அங்க 2, 3 பேர் இருந்தாங்க சார். இன்டர்வியூ நடக்குற மாதிரி தெரியல. பெரிய முதலாளி யாராவது வந்திருப்பாங்களோனு நாங்க நினைச்சோம். அங்க ரொம்ப வல்கரா பேசுனாங்க. ரொம்ப ஒரு மாதிரி தப்பாவெல்லாம் நடந்துக்கிட்டாங்க. வாக்குவாதம் நடக்கும்போதே வீடியோவா வேற ஷூட் பண்ணீட்டாங்க. இதுக்கு ஒத்துழைக்கலனா இந்த வீடியோவ நெட்ல போட்டிருவோம்னு அப்டிஇப்டின்னு சொன்னாங்க.

என்னா பண்ணனும்னே எனக்கு தெரியல. அப்புறம் என்னன்னா மறுபடியும் கால் பண்ணி, அதிமுக எம்எல்ஏ பெயரைச் சொல்லி நீ அவங்ககிட்ட போகணும், பாக்கணும்னு சொல்லிட்டே இருந்தாங்க. அவுங்கக்கிட்ட நீ வரணும் என 2, 3 தடவை கூப்பிட்டுக்கிட்டே இருந்தாங்க. வர முடியாதுனு சொன்னா என்ன பண்ணுவீங்கனு கேட்டப்போ, உன்னுடைய வீடியோ எல்லாமே இருக்கு. அத கண்டிப்பா நெட்ல ரிலீஸ் பண்ணப்போறோம் அப்புடீன்ற மாதிரி சொன்னாங்க. அப்புறம் மறுபடியும் அந்த வீடியோவ மறுபடியும் எனக்கே அனுப்பி நீ வா நீ வான்னு கூப்பிட்டுக்கிட்டே இருந்தாங்க..."

இந்தப் பாலியல் தொந்தரவு குறித்துப் பாதிக்கப்பட்ட பெண்களில் ஒருவர் கொடுத்த புகார் மனுவைக் காவல்துறை அதிகாரிகள் வாங்க மறுத்ததோடு இதில் தொடர்புடைய ஆளும் கட்சி எம்எல்ஏ விடமே அந்தப் பெண்ணை அழைத்து சென்று பேரம் பேசி மிரட்டியதாகவும் வழக்கறிஞர் அருள் கூறுகிறார். இதனால் இவ்விவகாரத்தை முறையாக விசாரித்தால் பல உண்மைகள் வெளிவரும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளின் கடும் கண்டனங்களினால் பாதிக்கப்பட்ட பெண்களின் புகாரைப் பெற்றுக் கொண்டு பெயரளவில் வழக்குப்பதிவு செய்த காவல் துறை, குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் பாதிக்கப்பட்டவர்கள் பக்கம் நின்ற வழக்கறிஞர். அருளுக்கெதிராக அதிமுக வழக்கறிஞர்கள் மற்றும் மகளிரணியினர் கொடுத்த புகார் மனு மீது வழக்குப்பதிவு செய்த பெரம்பலூர் காவல் துறை வழக்கறிஞர்அருளை வன் கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ்க் கைது செய்தது.

இச்சம்பவம் குறித்துத் திமுக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் "பொள்ளாச்சி விவகாரம் போலவே இந்தப் பாலியல் புகாரை வெளியே சொல்ல முடியாமல் எப்படிப் பெண்கள் அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அந்தப் பெண்ணின் பேட்டி உணர்த்துகிறது. ஆனால், அந்தக் கொடூரத்தைச் செய்தவர்கள் மீது கொடுக்கப்பட்டுள்ள இந்தப் புகாரையும் கூட மூடி மறைக்கும் விதத்தில்தான் அதிமுக அரசு செயல்பட்டு வருகிறதே தவிர –உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துப் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதி வழங்கிடவோ அல்லது பெண்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்ச உணர்வைப் போக்கிடவோ முன்வரவில்லை" என்று விமர்சித்துள்ளார்.

மேலும் பொள்ளாச்சி விவகாரத்தில் அதிமுக அரசின் தோல்வி இப்போது பெரம்பலூரிலும் எதிரொலித்திருக்கிறது. பெரம்பலூர் பாலியல் புகார்களைத் தீவிரமாக விசாரித்து, அப்பாவிப் பெண்களிடம் பாலியல் வன்முறை செய்தவர்கள் அனைவரையும் தயவு தாட்சண்யமின்றி கைது செய்திட தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிடும் ஸ்டாலின், மே 23 ஆம் தேதிக்குப் பிறகு தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படும். அப்போது பொள்ளாச்சி வழக்கு மற்றும் பெரம்பலூர் வழக்கு போன்றவற்றை நீர்த்துப் போக வைக்க அதிமுக அரசு எடுத்த நடவடிக்கைகள், அதற்குத் துணை போன அதிகாரிகள் ஆகியோர் பற்றித் தனி விசாரணை நடத்தப்படும் என்றும், இந்த இரு வழக்கிலும் உள்ள உண்மைக் குற்றவாளிகள் எவ்வளவு உயர் பதவியில் இருந்தாலும், யாருக்கு நெருக்கமானவர்களாக இருந்தாலும், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்திருக்கிறார்.

இந்த நிலையில் பெரம்பலூர் பாலியல் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி பெரம்பலூர் பழைய பேருந்து நிலையம் காந்தி சிலை முன்பு பல்வேறு கட்சியினரும் பொது நல அமைப்புகளும் ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளன.

பெரம்பலூர் மட்டுமன்றி தமிழகம் முழுவதும் கனலாய்த் தகித்துக் கொண்டிருக்கும் இந்த கூட்டுப் பாலியல் வன்புணர்வுச் சம்பவம் குறித்து எடப்பாடி அரசும் காவல்துறையும் ஒன்றுமே தெரியாதது போல் நடிப்பது ஆளும் கட்சி எம்எல்ஏ உள்ளிட்ட குற்றவாளிகளைக் காப்பாற்றுவதற்கே என பொதுமக்கள் பேசத் தொடங்கியுள்ளனர். ●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-4204 7162

# வருந்துகிறோம்



திராவிட முன்னேற்றக் கழக மகளிர் அணிப் பொறுப்பாளர்களில் ஒருவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வசந்தி ஸ்டேன்லி 27-04-2019 அன்று சென்னையில் காலமானார். அவர் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் நம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்



மார்க்சிய பெரியாரியப் பொதுவுடமைக் கட்சியின் நிறுவனர், ஐயா வே.ஆனைமுத்து அவர்களின் துணைவியாரான சுசிலா அம்மையார் 30-04-2019 அன்று இயற்கை எய்தினார். ஐயா ஆனைமுத்து அவர்களோடும், அவர் குடும்பத்தினரோடும் துயரதைப் பகிர்ந்து கொள்கிறோம்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

**கருஞ்சட்டைத் தமிழர்**

# இது
# மக்கள் விரோத ஆணையம்

மக்களவைக்கு ஏழு கட்டங்களாகத் தேர்தல் நடத்தப்படும் என்று இந்தியத் தேர்தல் ஆணையம் மார்ச் 10ஆம் தேதி அறிவித்தது

தேர்தலுக்கான நடத்தை விதி முறைகள் அன்று தொடக்கம் நடைமுறைக்கு வந்து விட்டன

சாதி, மதம், இராணுவம், நாட்டின் பாதுகாப்பு உள்ளிட்டவைகளைப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தக் கூடாது என்பது தேர்தல் நடத்தை விதிகளுள் அடங்கும்

இந்நிலையில் “இந்துக்களைக் காங்கிரசார் அவமதிக்கின்றனர். அக்கட்சி இந்துக்களைப் பார்த்து பயப்படுகிறது. அதனால் இந்துக்கள் சிறுபான்மையினராக உள்ள வயநாட்டில் ராகுல் போட்டியிடுகிறார்” என்று ஏப்ரல் 1ஆம் தேதி வார்தாவிலும்-

“நான் முதல் முறையாக வாக்காளர்களிடம் கேட்கிறேன். பாலக்கோட்டில் பயங்கரவாத முகாம்கள் மீது தாக்குதல் நடத்திய விமானப்படை வீரர்களுக்கு உங்கள் வாக்குகளை அளிப்பீர்களா? புல்வாமா தாக்குதலில் உயிரிழந்தத் தியாகிகளுக்கு உங்கள் வாக்குகளை அர்ப்பணிப்பீர்களா?” என்று ஏப்ரல் 8ஆம் தேதி லத்தூரிலும் பேசிப் பிரச்சாரம் செய்திருக்கிறார் மோடி.

இவைகளில் வார்தா பேச்சு மத அடிப்படையிலும், லத்தூர் பேச்சு நாட்டின் பாதுகாப்பு, இராணுவம் குறித்த பேச்சாக இருப்பது அப்பட்டமான தேர்தல் விதிமீறல்.

இதுபோன்ற நாற்பது விதிமீறல்களைப் பாஜகவின் மோடியும், அமித்ஷாவும் செய்திருக்கிறார்கள்

தேர்தல் ஆணையத்தில் இவை குறித்து காங்கிரஸ் கட்சி புகார்கள் கொடுத்தும், ஆணையம் கண்டுகொள்ளவே இல்லை. பெயருக்கு இரண்டு புகார்களை மட்டுமே பரிசிலினை செய்தது

இதை உச்ச நீதிமன்றத்திற்குக் கொண்டுசென்றது காங்கிரஸ்.

உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையிலான அமர்வு விசாரணைக்கு எடுத்துகொண்டு, தேர்தல் ஆணையத்தைக் கடுமையாகக் கண்டித்துள்ளது.


ஏன் இதுவரை இந்தப் புகார்களைத் தேர்தல் ஆணையம் விசாரிக்கவில்லை என்று கேள்வி எழுப்பிய நீதிபதிகள், இது குறித்த அறிக்கையை மே 6ஆம் தேதிக்குள் அளிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திற்கு ஆணையிட்டனர்.

ஒரு சனநாயக நாட்டில், தன்னாட்சி அதிகாரம் பெற்ற தேர்தல் ஆணையம், இப்படி ஆளும் கட்சிக்கு அடிபணிந்து போவதும், அவைகளுக்கு ஆதரவாகச் செயல் படுவதும் வன்மையான கண்டனத்திற்கு உரியன

இது மக்கள் விரோத ஆணையம் என்று நாளைய வரலாறு பேசும்

# கல்வியைச் சூறையாடும் சூரப்பா !

● மா.உதயகுமார்




மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் தேசிய அளவில் கல்லூரிகளுக்கான தரவரிசைப் பட்டியலை அண்மையில் வெளியிட்டது. அதில் முதல் நூறு இடங்களில் இருபதுக்கும் மேற்பட்டவை தமிழ்நாட்டைச் சேர்ந்த கல்லூரிகள். முதல் இடத்தை IIT சென்னையும், எட்டாம் இடத்தை அண்ணா பல்கலைக்கழகமும் பிடித்தன. ஆனால் இது சிலருக்குப் பிடிக்கவில்லை.

கற்றோர் ஏத்தும் தமிழகக் கல்விக் கட்டுமானத்தைச் சீர் குலைப்பதற்கான முயற்சிகள் மத்தியில் பா.ஜ.க ஆட்சிக்கு வந்த நாள் முதல் எடுக்கப்பட்டு வருகின்றன. மருத்துவக் கல்விக்கு நீட் தேர்வின் மூலம் முட்டுக்கட்டை போடப்பட்டது. பொறியியல் கல்வியையும் பொடிப் பொடியாக்குவதற்குப் பொருந்தாத ஒருவரைத் துணை வேந்தராக நியமனம் செய்தனர்.

பா.ஜ.க வினர் நியமிக்கும் ஆளுநர்களும், ஆளுநர்கள் நியமிக்கும் துணை வேந்தர்களும் குழப்பம் விளைவிப்பதைத் தவிர வேறொன்றும் செய்வதில்லை. எல்லா நாடுகளிலும் ஒரு அமைப்பை வலுப்படுத்துவதற்கு ஏற்ற தகுதிவாய்ந்த அறிஞர்களைப் பல்வேறு கட்ட ஆய்வுகளுக்குப் பின் தேர்வு செய்வர். ஆனால் இங்கு மட்டும் தான் நன்றாகச் செயல்பட்டு வரும் ஒரு அமைப்பைச் சீர்குலைப்பதற்கு தகுதிவாய்ந்தவர்களைப் பல நாள் தேடலுக்குப் பின் தேர்வு செய்கின்றனர்.

நாடு போற்றும் அண்ணா பல்கலைக்கழகத்திற்குச் சென்ற ஆண்டு கர்நாடகாவைச் சேர்ந்த சூரப்பாவை ஆளுநர் பன்வாரிலால் புரோகித் நியமனம் செய்தார். இந்த நியமனத்தில் நடந்த முறைகேடுகளை அன்றைக்கே "கருஞ்சட்டைத் தமிழர்" இதழில் எழுதியிருந்தோம். குழப்பங்களை விளைவிப்பதற்காக நியமிக்கப்பட்டவர், அவர் பணியைச் சரியாகச் செய்கிறார். இந்த ஓராண்டில் பல முறை அண்ணா பல்கலைக்கழகம் சர்ச்சைகளைச் சந்தித்தது. இப்போது மீண்டும் ஒரு குழப்பம்.

"தமிழ்நாட்டில் அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் அதன் துணைக் கல்லூரிகளில் முதுநிலைப் பட்டப்படிப்புகளில் சேர்வதற்கான நுழைவுத் தேர்வுகளை மட்டும் சென்னை அண்ணா பல்கலைக்கழகம் நடத்தும்" என்று பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்தார். துணை வேந்தர் சூரப்பாவின் ஆணைப்படி இந்த அறிவிப்பு வெளியானது. இது நுழைவுத்தேர்வு அறிவிக்கையை எதிர்பார்த்திருந்த பொறியியல் பட்டதாரிகளுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த அறிவிப்புப் பல்வேறு தரப்பாலும் கண்டிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் அரசு மற்றும் தனியார் பொறியியல் கல்லூரிகளில் முதுநிலைப் பட்டப்படிப்புகளில் சேருவதற்காக தமிழ்நாடு பொதுநுழைவுத் தேர்வு (TANCET) என்ற பெயரில் அண்ணா பல்கலைக்கழகம் நுழைவுத்தேர்வை நடத்தி வருகிறது. ஆனால் இந்த ஆண்டு அண்ணா பல்கலைகழகத்திற்கு மட்டும் AUCET என்ற பெயரில் நுழைவுத் தேர்வு நடத்தப்படும் என்று ஊடகங்களில் செய்தி வெளியானது. இதனால் மற்ற கல்லூரிகளில் முதுநிலைப்பட்டப் படிப்பில் சேர விரும்பும் மாணவர்கள் தனியாக இன்னொரு நுழைவுத் தேர்வு எழுதும் நிலை ஏற்பட்டது. இது பொறியியல் பட்டதாரிகள் மத்தியில் பெரும் குழப்பத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியது.

தற்போது இந்த முடிவு மாற்றிக்கொள்ளப்பட்டு, வழக்கம் போல் TANCET நுழைவுத் தேர்வு நடத்தப்படும் என்று அண்ணா பல்கலைக்கழகம் அறிவித்திருக்கிறது.

நாம் நுழைவுத் தேர்வே கூடாது என்று குரல் கொடுக்கிறோம். ஆனால் அவர்கள் இருக்கிற வழக்கத்தையே மாற்றிப் பல நுழைவுத் தேர்வுகளை உருவாக்க முயற்சிக்கிறார்கள்.

எப்படியாவது தமிழக உயர்கல்வி வளர்ச்சியை வீழ்த்திட நினைக்கிறார்கள். அதற்காக முதலில் குழப்பமான முடிவுகளை அறிவித்து எதிர்வினை எப்படி இருக்கிறது என்று பார்ப்பது. எதிர்வினை அவர்களுக்குப் பாதகமாக அமையும் பட்சத்தில் உடனே அதனைத் திரும்பப் பெறுவது.

மே மாதம் வந்தால் மாணவர்களுக்குக் கோடை விடுமுறை வருகிறதோ இல்லையோ, இவர்கள் கொடுக்கும் குடைச்சல் தவறாமல் வருகிறது. ●




Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secretary, Dravida Iyyakka Tamilar Peravai.